සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டு இறுதி மதிப்பீடு - 2019
Year End Evaluation

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය / வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் / Business & Accounting Studies | පත්‍රය / வினாத்தாள் / Paper | II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |

கவனிக்க: முதலாவது வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**01.** பின்வரும் விடய ஆய்வினைப் பயன்படுத்தி (i) – (x) வரையான வினாக்களுக்கு விடையளிக்க.
மதுர பாடசாலைக் கல்வியை முடித்த பின் பாடசாலைப் பைகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் வேலை செய்தார். பின்னர் அவர் தானே மூலதனமிட்டு பிரபல்யமான பாடசாலைக்கருகில் 2018.01.01ல் வணிகமொன்றை ஆரம்பித்து அதற்கு "மதுர பாக் சென்ரர்" (Mathura Bag Centre) எனப் பெயரிட்டார். அத்தினத்தில் மூலதனம் பின்வருமாறு காணப்பட்டது.

| | ரூபா |
|---|---|
| காசு | 800,000 |
| தளபாடம் | 100,000 |
| மோட்டார் வாகனம் | 400,000 |

2018.01.05 இல் வணிகத்தினால் ரூபா 400,000 வங்கிக்கடன் பெறப்பட்டது.

ஜனவரி மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளது..

| | ரூபா. |
|---|---|
| பை (Bag) கொள்வனவு | 100,000 |
| பை விற்பனை | 150,000 |
| வாடகை | 15,000 |
| உட்சுமைக் கூலி | 3,000 |

பாடசாலைக்கு அருகில் வணிக நிறுவனம் காணப்பட்டமை அவரது வணிகத்தின் வெற்றிக்கு வழிவகுத்திருந்தது. 2018.01.20ல் இவ்வணிகத்தில் அமல் என்பவர் வணிகத்தின் பங்காளாராகச் சேர்ந்தார். எனினும் வணிகத்தின் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. இவ் வணிகத்திற்குப் போட்டிநிறுவனங்கள் எவையும் காணப்படவில்லை. வணிகத்தின் மோட்டார் வாகனத்திற்கான பெறுமானத்தேய்வு 10% ஆகும். 2018.01.31இல் இறுதியிருப்பு இல்லை எனக் கொள்க.

i) அ) மேற்கூறப்பட்ட சம்பவத்தில் 01.01.2018ல் மதுரவினால் ஆரம்பிக்கப்பட்ட 'மதுர பாக் சென்ரர்' எவ்வகையான வணிக அமைப்பாகும்?
ஆ) இவ்வணிகத்தில் மதுரவுடன் அமல் சேர்ந்த பின் அது எவ்வகை வணிக அமைப்பாகும்?

ii) அ) மதுர பாக் சென்ரரின் வாய்ப்புக்கள் எவை?
ஆ) வணிகத்தில் அமல் சேர்க்கப்பட்ட பின் அவ்வணிகத்தில் காணப்பட்ட நன்மைகள் இரண்டு தருக?

iii) அ) மதுர வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா?
ஆ) அவ்வாறாயின் எச்சட்டத்தின் கீழ்பதிவு செய்யப்பட வேண்டும்?.



Scanned by TapScanner

iv) அ) இவ்வணிகத்தில் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டால் ஆரம்பிக்க வேண்டிய வங்கி கணக்கு எது?

ஆ) இக்கணக்கை ஆரம்பிக்கக்கூடிய வங்கி வகை எது?

v) அ) இவ்வணிகத்தின் 01.01.2018இல் முழுச்சொத்தின் பெறுமதி யாது?

ஆ) இச் சொத்துக்களில் நடைமுறைச் சொத்து, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு உதாரணம் தருக?

vi) இவ்வணிகத்தை விஸ்தரிக்கத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் எவை?

vii) மதுர பாக் சென்ரரில் இரு ஊழியர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டமை எவ்வகை முகாமைத்துவக் கருமமாகும்.

viii) 31.01.2018ல் காசு மீதியைக் காண்க.

xi) வங்கிக்கடன் பெறப்பட்டமைக்கான இரட்டைப் பதிவினைத் தொகையுடன் குறிப்பிடுக.

x) இவ்வணிகத்தின் ஜனவரி மாதத்திற்கான தேறிய இலாபம் எவ்வளவு? (10x2=20 புள்ளிகள்)

பகுதி I

## வணிகக் கல்வி

(இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக)

02. i) அ) தேவை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

ஆ) தேவைக்கும் விருப்பத்துக்குமான வேறுபாடுகள் இரண்டு தருக.

ii) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா எனக் குறிப்பிடுக.

அ) வணிகத்தின் பிரதான நோக்கம் இலாபம் உழைப்பதாகும். ( )

ஆ) வணிகத்தின் புறச்சூழலை வணிகத்தினால் கட்டுப்படுத்த முடியும். ( )

இ) அரசு வரிகள் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றது. ( )

ஈ) தனியாள் வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் கட்டாயமானது. ( )

iii) மனித தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு வணிக உலகிற்கு சில்லறை வியாபாரமும், மொத்த வியாபாரமும் அவசியமானவை.

அ) சில்லறை வியாபாரம் என்றால் என்ன?

ஆ) மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக.

iv) வணிக நடவடிக்கைகளுக்கு புறச்சூழல் காரணிகள் அவசியமானவை.

அ) அரசியல் சூழல் என்றால் என்ன?

ஆ) பூகோளச் சூழலின் அனுகூலங்கள் இரண்டு தருக? (2 x 4=8 புள்ளிகள்)

03. i) அ) நோக்க அடிப்படையில் வணிக அமைப்பின் பாய்ச்சல் வரைபடத்தைத் தருக.

ஆ) தனியாள் வணிக அமைப்பின் பண்புகள் இரண்டு தருக?

ii) பின்வரும் கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா எனக் குறிப்பிடுக.

அ) கூட்டுறவு அரசதுறை வணிகமாகும். ( )

ஆ) ஆதனக் காப்புறுதிக்கு இழப்பீட்டுத் தத்துவம் பொருத்தமானது ( )

இ) முறைசார்ந்த முதலீட்டு வழியாக திறைசேரி உண்டியலைக் குறிப்பிடலாம். ( )

ஈ) அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க பேரூந்துக்களைக் கொள்வனவு செய்வது போக்குவரத்து அடிப்படை அம்சமான ஊடகத்தைக் குறிக்கும். ( )



Scanned by TapScanner

iii) இலத்திரனியல் பணத்தினால் தற்போது கொடுக்கல், வாங்கல்கள் இலகுவாக்கப்பட்டுள்ளது.

அ) தற்போது பாவனையிலுள்ள இலத்திரனியல் பணவகைகளைக் குறிப்பிடுக?

ஆ) வங்கிக் கணக்கு இல்லாமல் ஆரம்பிக்கப்படும் இலத்திரனியல் பணவகை எது?

iv) வணிகங்களுக்கு தொடர்பாடல் மிகவும் அவசியமானது.

அ) தொடர்பாடலை அவற்றின் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

ஆ) பொருத்தமான தொடர்பாடல் ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக? (2x4=08 புள்ளிகள்)

04.i) அ) முகாமைத்துவம் என்றால் என்ன?

ஆ) முகாமைத்துவக் கருமங்கள் யாவை?

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக் குறிப்பிடுக.

அ) வணிகத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்ற செய்முறை நெறிப்படுத்தலாகும். ( )

ஆ) வணிகத்திற் மிகவும் கவர்ச்சியாகவும் இலாபத்தன்மையும் திருப்திப்படுத்தக்கூடிய நுகர்வோரை உள்ளடக்கிய சந்தைப் பாங்கு இலக்கு சந்தை எனப்படும். ( )

இ) இலங்கையில் பங்கு பரிமாற்றல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனம் இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவாகும். ( )

ஈ) சேமிப்புக் கணக்கு ஒன்றின் மூலம் வட்டியுடன் ஏனைய ஆதாயங்களையும் பெற்றுக் கொள்ளலாம். ( )

iii) அ) முகாமைத்துவத்தில் வினைதிறன் என்பதனை விளக்குக.

ஆ) சந்தைப்படுத்தல் கலவையில் 'மேம்படுத்தல்' என்பதனை விளக்குக.

iv) அ) முதலீடு என்றால் என்ன?

ஆ) பங்குகள் என்றால் என்ன? (2x4=08 புள்ளிகள்)

## பகுதி II
## கணக்கீடு
## இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

05. i) அ) சொத்து என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாக விளக்குக. ( 01 புள்ளி)

ஆ) பொறுப்புக்களின் பண்புகள் இரண்டு தருக? ( 01 புள்ளி)

ii) சுடிதர் வணிகத்தின் 2018 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1) ரூ. 800000 உரிமையாளர் மூலதனமாக இட்டார்.
2) ரூ. 5000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3) ரூ. 4000 கிரயமான பண்டங்கள் 6000ற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
4) மின்சாரக் கட்டணம் ரூ. 2000 செலுத்தப்பட்டது.



Scanned by TapScanner

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதனைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = | உரிமை + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

(04 புள்ளிகள்)

iii) ருபிஷீ வணிகத்தின் 2018 பெப்ரவரி மாதத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல் வாங்கல்கள் ஆகும்.

| திகதி | பட்டியல் இல. | கொள்வனவாளர் | பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 2/1 | 65 | சபரி | 5000 |
| 2/8 | 72 | டொரின் | 2000 |

வேண்டப்படுவது

அ) ருபிஷி வணிகத்தின் 2018 பெப்ரவரி மாதத்திற்கான விற்பனை நாளேட்டினைத் தயாரிக்குக.

ஆ) 28.02.2018ல் இருந்தவாறு பேரேட்டுக் கணக்குகளுக்கு விற்பனை நாளேட்டின் தகவல்களைப் பதிவு செய்க.

(04 புள்ளிகள்)

iv) தினேஷ் வணிகத்தின் 2019 மார்ச் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

3/1 வங்கி மீதி ரூ. 200000

3/5 காசோலை மூலம் கொள்வனவு ரூ. 8000

3/8 கடன்கொடுத்தோனுக்கு கொடுத்த காசோலை ரூ. 3000

3/10 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது ரூ. 5000

3/18 வணிகத்திற்கு கிடைத்த காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

விற்னை மூலம் ரூ. 3000

கடன்பட்டோன் சமன் ரூ. 8000

3/25 கடன் கொடுத்தோனுக்கு கொடுத்த காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது.

3/30 காசோலை மூலம் செலுத்திய தொலைபேசிக் கட்டணம் ரூ. 2000

தேவைப்படுவது:

மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிந்து 31.03.2019இல் திகதிக்கு வங்கிக் கணக்கை சமப்படுத்துக. (02 புள்ளிகள்)

06. i) அ) வங்கிக் கூற்று என்றால் என்ன? ( 01 புள்ளி)

ஆ) வங்கி கணக்கின் ஊடாகச் செய்யும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான மூல ஆவணங்கள் இரண்டு தருக. ( 01 புள்ளி)

ii) வங்கி இணக்கக் கூற்று என்றால் என்ன?

iii) சரித வணிகத்தின் 31.05.2019 வங்கி கணக்கு மீதி ரூ. 25000 காணப்பட்டது. இது வங்கிக்கூற்று மீதிக்குச் சமப்படவில்லை. இதற்கான காரணங்கள் வருமாறு



Scanned by TapScanner

1. வங்கிக்கு கிடைத்த நேரடிவைப்புக்கள் ரூ. 2,000

2. வைப்புச் செய்யப்பட்டும் தீர்வையாகாத காசோலை ரூ. 5,000

3. வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 1,000

4. வழங்கப்பட்டும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 1,000

தயாரிக்க வேண்டியவை:

1. 31.05.2019ல் இருந்தவாறு வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்கல்.

2. 31.05.201ல் இருந்தவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(04 புள்ளிகள்)

iv) டேமியன் வணிகத்தின் 31.01.2019ல் பரீட்சை மீதியைத் தயாரித்த போது அது இணங்காததால் வித்தியாசமானது தொங்கல் கணக்கில் ரூ. 2000 செலவு வைக்கப்பட்டது. பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டது.

1. காணிகட்டிட திருத்தச் செலவு ரூ. 2,000 காணிகட்டிடக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டது.

2. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ 3,000 காசுக் கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

3. கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ. 5000 கடன்பட்டோர் கணக்கில் பதியப்படவில்லை.

தயாரிக்க வேண்டியவை:

1. மேலேயுள்ள தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு

2. தவறுகளை திருத்திய பின்னுள்ள தொங்கல் கணக்கு (05 புள்ளிகள்)

07. i) அ) இலாபநோக்கற்ற நிறுவனங்களின் நோக்கங்கள் யாவை?

ஆ) இவாநோக்கற்ற நிறுவனங்களால் தயாரிக்கப்படும் முக்கியமான கணக்குகள் எவை?

ii) இரட்ணம் விளையாட்டு கழகத்தின் 31.12.2018ல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு

பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம் | 20,000 | எழுது கருவி | 1,000 |
| நன்கொடை | 5,000 | விழாச் செலவு | 3,000 |
| டிக்கட் விற்பனை | 2,000 | அச்சுப்பதித்தல் செலவு | 4,000 |
| | | மீதி/செ. 31/12 | 19,000 |
| | 27,000 | | 27,000 |
| மீதி/வ. 1/1 | 19000 | | |

※ அங்கத்தவர்களின் எண்ணிக்கை 250. ஒரு அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக்கட்டணம் ரூபா 100 ஆகும்.

தயாரிக்க வேண்டியது:

31.12.2018ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றினைத் தயாரிக்குக.

(02 புள்ளிகள்)



Scanned by TapScanner

iii) மயூரி வணிகத்தின் 31.12.2018ல் முடிவடைந்த ஆண்டுக்கான பரீட்சை மீதி வருமாறு:

பரீட்சை மீதி

| விபரம் | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மூலதனம் | | 1263000 |
| கொள்வனவு | 200,000 | |
| விற்பனை | | 500000 |
| இருப்பு 01.01.2018 | 50,000 | |
| உட்சுமைக்கூலி | 3,000 | |
| கடன்பட்டோர் | 75,000 | |
| கடன் கொடுனர் | | 15,000 |
| வங்கிக்கடன் (10%) | | 100,000 |
| காணி கட்டிடம் (கிரயம்) | 800,000 | |
| தளபாடம் (கிரயம்) | 200,000 | |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 500,000 | |
| 01.012018 பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| தளபாடம் | | 20,000 |
| மோட்டார் வாகனம் | | 50,000 |
| பெற்ற கழிவு | | 5,000 |
| கொடுத்த கழிவு | 7,000 | |
| காப்புறுதி | 3,000 | |
| சம்பளமும் கூலியும் | 6,000 | |
| வங்கிக் கட்டணம் | 4,000 | |
| போக்குவரத்து | 5,000 | |
| வங்கி மீதி | 60,000 | |
| காசு மீதி | 40,000 | |
| | 1953000 | 1953000 |

மேலதிக தகவல்கள்:

1) 2018.12.31 இல் இருப்புக்கள் ரூபா 20000
2) தளபாடத்திற்கும் மோட்டார் வாகனங்களுக்கும் வருடாந்தம் நேர்க்கோட்டு முறையில் 10% பெறுமானத் தேய்விடல் வேண்டும்.
3) கடன்பட்டோரில் ரூபா 40000/- ஐ அறவிட முடியாக் கடனாக பதிவளிக்கப்படல் வேண்டும்.
4)அட்டுறுக் காப்புறுதிக் கட்டணம் ரூபா 1000 ஆகும்.

தயாரிக்க வேண்டியவை

1.31.12.2018ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

2.31.12.2018ல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று (மொத்தம் 08 புள்ளிகள்)



Scanned by TapScanner